மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் குறிப்பிடுவது நியாயமான உணர்வு என்பதை நான் மறுக்கவில்லை. கமர்சியல் பிளேன் அனுப்பி ஆவர்கள் உடலைக் கொண்டு வந்திருக்க முடியும். அதற்கு மற்ற ஆவ்ரோ பிளேன்கள் எல்லாம் போவதற்கில்லை. போக வேண்டிய விமானம் போயிங் ஒன்றுதான். அந்த விமானம் நேற்றைக்குத்தான் செல்ல முடியும். நேற்றைக்கு அல்ல, இன்றைக்கு. ஏனென்றால் விமான சர்வீஸ் இரண்டு முறை தான் இருக்கிறது. அதுவும் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்குப் பிறகுதான் நாளைக்கு 10-ம் தேதி புறப்படுகிற விமானத்தில் அவருடைய உடலை இங்கே கொண்டு வருவது என்ற தீர்மானத்தை இங்கே சொன்னேன்.

திரு, மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே......

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். இரங்கல் தீர்மானத்தைப் படித்து முடித்து விடுகிறேன்.

(2) இரங்கல்குறிப்பு—முன்னாள் உறுப்பினர் திரு. ஆசைத்தம்பி மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் 7-4-1979 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி 1957ஆம் ஆண்டிலிருந்து 1962ம் ஆண்டு வரை சென்னை ஆயிரம் விளக்குத் தொகுதியிலிருந்தும், 1967ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டு வரை சென்னை எழும்பூர் தொகுதியிலிருந்தும் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1977ஆம் ஆண்டு வடசென்னை பாராளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு, பாராளுமன்ற மக்கள் அவையில் தற்போது உறுப்பின ராக பணியாற்றி வந்தார்.

அன்னார் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.